அசல் வழக்கு எண். 201/2023 வா.சா.1 குமரேசன் த/பெ தேவராஜ்

**10.09.2024 குறுக்கு விசாரணை**

1. நான் ராமசாணிக்குப்பம் கிராமத்தை சேர்ந்தவர். பிரதிவாதி கீழ்ப்பட்டு கிராமத்தை சேர்ந்தவர். எம்.டி.ஆர். சில்க் சேரிஸ் நான் நடத்தும் நிறுவனம் என்றால் சரியல்ல. அந்த கடையை என் அண்ணன் நடத்தி வருகிறார். அந்த நிறுவனம் எம்.டி.ஆர் பிரதர்ஸ் என்ற பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். அந்த நிறுவனத்தில் தான் பிரதிவாதி பட்டு சேலை நெய்து வருகிறார் என்றால் எனக்கு தெரியாது.

2.நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் கைத்தறி வேலை செய்கிறேன். பிரதிவாதி என்னிடம் பட்டு வாங்கி சென்றாரா என்றால் நான் கடை நடத்தவே இல்லை அதனால' எனக்கு தெரியாது. பிரதிவாதி மீது எதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் கடனுறுதிச்சீட்டின்பேரில் பணம் பெற்றார் அதனால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

3.வா.சா.ஆ.1 கடனுறுதிச்சீட்டில் சாட்சி கையெழுத்து போட்ட ராமலிங்கம் என்பவர் எனக்கு பழக்கம். அவர் தான் பிரதிவாதியை என்னிடம் அழைத்து வந்து அறிமுகம் செய்து வைத்தார். அவ்வாறு பிரதிவாதியை அறிமுகம் செய்து வைத்த தேதி 06.12.2020 ஆகும். பிரதிவாதி என்னிடம் ரூ.1,25,000/- வேண்டுமென்று கேட்டார்.

4. அப்போது பிரதிவாதி ராமலிங்கம் மற்றும் மற்றொரு சாட்சியான எஸ்.என்.குமாரசாமி ஆகியோர் வந்தார்கள். குமாரசாமி என்பக்கத்து வீட்டுக்காரர் என்றால் சரிதான். பிரதிவாதி என்னிடம் பணம் கேட்ட அன்றைய தினமே நான் பணத்தை கொடுத்துவிட்டேன். என் கையில் இருந்த தொகையை கொண்டு தான் பிரதிவாதிக்கு பணம் கொடுத்தேன்.

5.சாட்சி ராமலிங்கம் பிரதிவாதியுடன் வந்திருந்தார். குமாரசாமியை நான் அழைத்தேன். பிரதிவாதி பணம்பெற்று கொண்டு வட்டி தரவில்லை என்று நான் பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அனுப்பினேன்.

6. வா.சா.ஆ.1 கடனுறுதிச்சீட்டில் சாட்சி கையெழுதது போட்டவரிடம் பிரதிவாதி எனக்குபணம் கொடுக்கவில்லை என்பதை சொன்னேனா என்றால் சொன்னேன். அதற்கு அவர' வரும் வரும் என்று சொன்னார்கள். ஆனால் பிரதிவாதி கடனை கொடுக்கவில்லை. அதற்காக நான் பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன்.

7.நான் தாவாவிலும் என் வழக்கறிஞர் அறிவிப்பிலும் பிரதிவாதி சாட்சி ராமலிங்கத்தை அழைத்து வந்தார் என்றும் அப்போது தான் வாதியிடம் கடன் கேட்டார் என்றும் சொல்லி உள்ளேனா என்றால் இல்லை. நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன்என்றும் நான் சில்க் சேரிஸ் செண்டர் நடத்தி வருகிறேன்என்றும் அதில் பிரதிவாதி நெசவுவேலைசெய்து வந்தார் என்றும்ஆனால் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன்என்றால் சரியல்ல.

8. பிரதிவாதி என்னிடமும் என் அண்ணனிடமும் சில்க் சேரிஸ் கடையில் 2002 முதல் 2020 வரை வேலை செய்து வந்தார் என்றும் அப்போது தினமும் பிரதிவாதியிடம் கணக்கு பற்றி கைநாட்டு மற்றும் கையெழுத்து பெற்று வந்தோம் என்றால் சரியல்ல. 2020ல் கொரோனா காலத்தில் பிரதிவாதி வேலையை விட்டு நின்றுவிட்டார் என்றும் அதனால் பழி வாங்க வேண்டுமென்ற எண்ணத்தில் இந்த பொய் வழக்கை பிரதிவாதி மீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

9.நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதி பெற்று கொண்டு என்னை நேரடியாக வந்து பார்த்தார் என்றும் அப்போது நான் மீண்டும் வேலைக்கு வந்துசேரவில்லை என்றால்

நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து விடுவதாக மிரட்டினேன்என்றும் சொன்னால் அது சரியல்ல.  நான் வருமான வரி கட்டுவதில்லை.

10. நான்  சொல்லி உள்ள சாட்சிகள் ராமலிங்கம் மற்றும் குமாரசாமி யார் என்றே பிரதிவாதிக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதியை என்னிடம் அழைத்து வந்தவர் ராமலிங்கம் தான். வா.சா.ஆ.1 கடனுறுதிச்சீட்டை எழுதியவர் என் அண்ணன் மகன் எம்.ஆர்.கோபிநாதன் ஆவார்.

11. பிரதிவாதி  வறுமை கோட்டிற்கு கீழ் உள்ளதால்  நான்  அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை பெற்று கொண்டு பதில் அறிவிப்பு அனுப்ப வழி இல்லாமல் இருந்தார் என்றும்  நான் இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு வழக்கு நடத்த தனக்கு போதிய வசதி  இல்லை என்பதால் இலவச சட்ட உதவி மையம் மூலம் பிரதிவாதிக்கு வழக்கறிஞர் நியமனம் செய்யப்பட்டார் என்றும் சொன்னால்  அது பற்றி எனக்கு தெரியாது.

12. பிரதிவாதி என்னிடம் வேலையில் இருந்து நின்றுவிட்டதால் அவரை பழி வாங்க வேண்டுமென்ற எண்ணத்தில் நானும் என் பக்கத்து வீட்டுக்காரரும் என் அண்ணன் மகனும் சேர்ந்து கொண்டு கடனுறுதிச்சீட்டு தயார் செய்து  இந்த பொய்யான வழக்கை பிரதிவாதி மீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு சம்மந்தமில்லாத இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றால் சரியல்ல.